செ.வெ.எண்.37 நாள்: 11.12.2020

# தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் நடைபெற்று வரும் பல்வேறு திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார். ஆழ்துளை கிணற்றினை பாதுகாப்பற்ற முறையில் வைத்திருந்தவருக்கு நேரில் ஆய்வு செய்து அபராதம் விதித்தார்.

---

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் நடைபெற்று வரும் பல்வேறு திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.12.2020) நேரில் சென்று ஆய்வு செய்தார். ஓட்டப்பிடாரம் ஒன்றியம் ஜம்புலிங்கபுரம் ஊராட்சியில் முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தினை பார்வையிட்டார். தொடர்ந்து திடக்கூறுகள் ஒப்படைப்பு திட்டத்தில் எஸ்.புதூர் முதல் புதுபச்சேரி வரை 1.60 கி.மி. ரூ.45.45 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் தார்ச்சாலையை அளவீடுகளை துல்லியமாக உள்ளதா என்பதை ஆய்வு செய்தார். மேலும் ராஜாவின்புதூர் பகுதியில் திரு.ஆதிச்சாமி என்பவர் ஆழ்துளை கிணறு அமைத்து அதனை முறையாக பாதுகாப்பாக மூடப்படாமல் உள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் ஆய்வு செய்து அதனை உடனடியாக சுற்றி சுவர் கட்டி சிலாப் போட்டு மூடுமாறும், பாதுகாப்பற்ற முறையில் வைத்திருந்தற்கு அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து பாஞ்சாலங்குறிச்சி ஊராட்சி சிலோன்காலணி பகுதியில் பசுமை வீடுகள் கட்டும் பணிகளையும், ஜெ.ஜெ.எம். திட்டத்தின்கீழ் சிலோன்காலணி பகுதியில் 269 வீடுகளுக்கு வீட்டு குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளதை ஆய்வு செய்தார். தொடர்ந்து இந்திராநகர் பகுதியில் ஜெ.ஜெ.எம். திட்டத்தில் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகளை பார்வையிட்டார். பாஞ்சாலங்குறிச்சி ஊராட்சியில் ரூ.53 லட்சம் மதிப்பில் சிலோன்காலணியில் 269 குடியிருப்புகளும், இந்திராநகர் பகதியில் 35 குடியிருப்புகளும் , சந்ததியர் குடியிருப்பு பகுதியில் 153 குடியிருப்புகளுக்கும் ஜெ.ஜெ.எம். திட்டத்தின்கீழ் 66 சதவிதத்துக்கு மேல் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள குடியிருப்புகளுக்கும் கூடுதல் பணியாளர்களைக் கொண்டு விரைந்து முடிக்க வேண்டும் என்று வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்காளர் பட்டியல் சுருக்கமுறை திருத்தம் தொடர்பாக பெறப்பட்டுள்ள மனுக்களின் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து வாக்காளர் பட்டியல் கண்காணிப்பாளர்களிடம் ஆய்வு செய்தார். மேலும் ஓட்டப்பிடாரம் வட்டம்

பரிவல்லிகோட்டை குறுவட்டம் மலைபட்டி பகுதியை சேர்ந்த திரு.கந்தசாமி என்பவர் 8.11.2020 அன்று மின்னல் தாக்கி இறந்த வகைக்கு பேரிடர் நிவாரண நிதி ரூ.4 லட்சத்திற்கான காசோலையினை அன்னாரது மனைவி திருமதி.அனிதா என்பவரிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இந்த ஆய்வின்போது ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திருமதி.சங்கரஜோதி, உதவி செயற்பொறியாளர் திரு.சண்முகநாதன், ஓட்டப்பிடாரம் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.கெலன்பொன்மணி, திருமதி.வளர்மதி, ஒன்றிய பொறியாளர் திருமதி.பிரான்சிஸ்கா, பணி மேற்பார்வையாளர் திரு.பன்னீர்செல்வம் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.